## அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு:

# கழகம், ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க 5 மாதங்கள் உறங்காமல் பணியாற்றுவோம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

வேலூர், நவ. 7 -

**அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகளைச் சந்தித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் கள ஆயத்தப் பணிகள் குறித்து கலந்துரையாடினார்.**

**அப்போது அவர், "நம்முடைய கழகம், ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம்முடைய தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் உட்கார வேண்டுமென்றால், நாம் அடுத்த ஐந்து மாதங்கள் உறங்கக் கூடாது. நமக்கு இருக்கக்கூடியதெல்லாம் ஒரே நோக்கம், நம்முடைய அணியினுடைய வெற்றி. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றி. உதய சூரியனின் வெற்றி" என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இன்றைக்கு இந்த அணைக்கட்டுத் தொகுதியின் வருகை தந்து கழகத்தின் நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள் உங்கள் எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களில் பலபேரை பலமுறை தனித்தனியாகச் சந்தித்திருக்கிறேன். ஆனால், இன்றைக்கு ஒரே அரங்கத்தில் உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் நந்தகுமார் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பேசி முடித்துவிட்டு உங்கள் அனைவரோடும் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் ஆர்வத்துடன் இருக்கிறேன். அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

சிலர் என்னுடன் செல்பி எடுக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நமக்கு செல்பி முக்கியம் கிடையாது; செல்ப் ரெஸ்பெக்ட்தான் முக்கியம் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த வேலூர் மாவட்டத்துக்கும் எனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. என் தாய்வீடு என்று இந்த வேலூர் மாவட்டத்தைச் சொல்லலாம். நான் இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, துணை முதலமைச்சராகப் பலமுறை இந்த மாவட்டத்துக்கு வந்துள்ளேன். ஆனால், எந்த பொறுப்பும் இல்லாமல், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், முதன்முறையாகத் தலைவர் அவர்கள், " நீ மக்களைச் சந்தித்துப் பேசு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்காகச் சென்று வாக்கு சேகரி" என்று என்னை அனுப்பிய முதல் மாவட்டம், இந்த வேலூர் மாவட்டம்தான். அதனால், என் வாழ்க்கையில் இந்த வேலூர் மாவட்டத்தை என்னால் மறக்கவே முடியாது. என்று நினைவுகளில் நீங்கா இடம்பெற்றுள்ளது, இந்த வேலூர் மாவட்டம்.

என் முதல் பிரச்சாரம் நினைவு இருக்கிறது. நம் கழகத்தின் பொதுச்செயலாளர் அவர்கள், நான் என்ன பேசப்போகிறேன் என்பதை என் எதிரில் நின்று பார்த்துக்கொண்டே இருந்தார். நான் முதன் முறையாகப் பிரச்சாரம் செய்தது, உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்துக்காக வாக்கு கேட்டது தான்.

**கொள்கைக் கூட்டம்!**

இந்தத் தொகுதியின் பெயர் அணைக்கட்டு. தொகுதியின் பெயரைப்போலவே உற்சாகத்துடனும், உறுதியுடனும் நீங்கள் அனைவரும் வந்துள்ளீர்கள். உங்களைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. ஏனென்றால், நீங்கள் என்னைப் பார்க்க வந்த கூட்டம் கிடையாது. நான் என்ன பேசுகிறேன் என்பதைக் கேட்க வந்த கொள்கைக் கூட்டம். அதுதான் கலைஞர் வளர்ப்பு. நான் வரும்போது, பலபேர் கைத்தட்டி, விசிலடித்து உற்சாகத்துடன் வரவேற்றீர்கள். ஆனால், நாம் வெறும் கைத்தட்டி, விசிலடித்து வரவேற்பதற்காக வந்த கூட்டம் கிடையாது. இங்கு வந்திருக்கும் கூட்டம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நம் தலைவர் அவர்களால் பண்படுத்தப்பட்ட கூட்டம். அரசியல் அறிவுள்ள கூட்டம். கொள்கைக்கூட்டம். அதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கலைஞரைப் பற்றி நாம் அனைவரும் பெருமையாகப் பேசுவோம். கலைஞர் அவர்கள் சந்தித்த தேர்தல்களில் எல்லாம் அவரே ஒரே தலைவர் என்றால் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும்தான். திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றாலும் சரி, வெற்றி வாய்ப்பை இழந்தாலும் சரி, சில நேரங்களில் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டாலும் கலைஞர் அவர்கள் நின்ற தேர்தலில் தோற்றதே கிடையாது. அவர் சந்தித்த 13 தேர்தலிலும் வெற்றிபெற்ற இந்தியாவிலேயே ஒரே தலைவர் கலைஞர் மட்டும்தான்.

**உங்களின் உழைப்புதான்!**

கலைஞரைப்போல நம் தலைவருக்கும் ஒரு பெருமை இருக்கிறது. நம் தலைவர் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பேற்ற பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஒரே தலைவர் நம் தலைவர் அவர்கள்தான். அதற்கு மிகமிக முக்கியமான காரணம், இங்கு வந்துள்ள உடன்பிறப்புகளான உங்களின் உழைப்புதான். அந்தப் பெருமைக்கெல்லாம் காரணம், கழகத்தின் உடன்பிறப்புகளான நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் கழகம் கிடையாது; கலைஞர் கிடையாது, நம் தலைவர் கிடையாது, நீங்கள் இல்லாமல் இந்த திராவிட மாடல் அரசு இல்லை. இந்த இயக்கத்தின் ஆணிவேர் இங்கு வந்துள்ள நீங்கள்தான்.

இன்றைக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளைக் கடந்து, 76வது ஆண்டில் வெற்றி நடைபோட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த 76 வருடத்தில், எத்தனையோ போராட்டங்கள், சவால்கள், நெருக்கடிகளை எல்லாம் கடந்து வந்த இயக்கம் தான் நம் இயக்கம். இத்தனை நெருக்கடிகளையும் தாண்டி, இன்றைக்கும் நம் கழகம் வலிமையோடும், இளமையோடும் இருக்கிறது என்றால் அதற்கு இங்கு வந்துள்ள கழக நிர்வாகிகள் உங்களின் உழைப்புதான் காரணம். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் உங்களின் உழைப்பால்தான் நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகத் தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பொறுப்பில் அமர்ந்தார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நம் முதலமைச்சர் அவர்கள், மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்துக்குத்தான் முதல் கையெழுத்திட்டார். இன்றைக்கு அந்தத் திட்டத்தின் மூலம் 820 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, இந்த வேலூர் மாவட்டத்தில் மட்டும் 15 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

**மிக சிறப்பான திட்டம்!**

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம். அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும், திட்டத்தை ஒவ்வொரு நாளும் சுமார் 22 லட்சம் குழந்தைகள், இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டம் இரண்டு மாதங்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தினார். அந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் சிங் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து, இந்த திட்டத்தைப் பார்த்து பாராட்டிப் பேசினார். `முதலமைச்சர் அவர்களே இது மிக, மிக சிறப்பான திட்டம். அடுத்த ஆண்டிலிருந்து எனது மாநிலத்திலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தப்போகிறேன்' என்று சொல்லி வாழ்த்திவிட்டுச் சென்றார்.

அரசுப் பள்ளியில் படித்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி சேரும்போது, தமிழ்ப்புதல்வன் – புதுமைப்பெண் திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார். இன்றைக்குத் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது. 50 சதவிகித மாணவிகள் உயர்கல்வி சென்று சேர்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 8 லட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளார்கள். இந்த வேலூர் மாவட்டத்தில் மட்டும் 16 ஆயிரம் மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாது என்று நம்மை விமர்சித்தார்கள். நாம் ஆட்சிக்கு வரும்போது, கடும் நிதி நெருக்கடி இருந்தது. ஆனால், நம் தலைவர் அவர்கள், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி, இந்தத் திட்டத்தை அமல்படுத்தினார். இத்திட்டத்தின் கீழ், ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள்.

சில இடங்களில் இந்தத் திட்டம் கிடைக்கவில்லை என்ற குறைகள் இருந்தன. மக்களின் குறைகளைத் தலைவரிடம் சொன்னவுடன், அதில் இருந்த விதிமுறைகள் சிலவற்றை தளர்த்தி, `உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம்களை முதலமைச்சர் நடத்த சொன்னார். அந்த முகாம்களில் 40 சதவிகித மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வேண்டிதான் வந்துள்ளன. வருகின்ற டிசம்பர் 15ஆம் தேதி முதல் விடுபட்டுபோன மகளிரில், தகுதியான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை நிச்சயம் வழங்கப்படும் என்று சட்டசபையில் அறிவித்துள்ளேன். இப்படி பல்வேறு திட்டங்களை நிறைவேற்று வதால்தான் இந்தியாவிலேயே இன்றைக்கு நம்பர் ஒன் மாநிலமாக, பொருளாதார வளர்ச்சியில் 11.19 சதவிகித வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது.

இந்த அணைக்கட்டுத் தொகுதிக்கு, கடந்த நான்கரை வருடத்தில் ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்களும் உங்களின் சட்டமன்ற உறுப்பினரும் கொண்டு வந்துள்ளார்கள். 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அப்துல்லாபுரம் விமான நிலையம் பகுதியில், நான்கு வழிச்சாலை போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் வகையில் அப்துல்லாபுரத்தில் 30 கோடியில் டைடல் பார்க், 20 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கை வசதிகள் கொண்ட அரசு பல்நோக்கு மருத்துவமனைக்கான பணிகள், முதலமைச்சர் கிராமசாலை திட்டத்தில், 20 கோடி ரூபாய் செலவில் அணைக்கட்டுத் தொகுதி முழுவதும் புதிய சாலைகள், சதுப்பேரி ஏரியை 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைத்து, அதைச் சுற்றுலாத் தளமாக மாற்றி அமைக்கின்ற பணிகள், பள்ளிகொண்டா அரசு மேல்நிலைப் பள்ளியில் 60 கோடி மதிப்பீட்டில் மாடல் ஸ்கூல் வளாகம், 50 கோடி செலவில் ஓட்டேரி ஏரியை நவீனமாக்கும் திட்டம் என இப்படிப் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு இந்த அணைக்கட்டுப் பகுதிக்கு, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் கொண்டு வந்திருக்கிறார்.

**ஆய்வுக் கூட்டம்!**

நேற்றுகூட நம்முடைய அண்ணன் நந்தகுமார் அவர்கள் சொன்னதுபோல மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்துக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள் அத்தனை பேரையும் வைத்துக்கொண்டு பத்து மாதங்களுக்கு முன்பு ஒரு ஆய்வுக்கூட்டம் நடத்தினோம். நேற்று ஒரு ஆய்வுக்கூட்டம் நடத்தி இருக்கிறோம்.

ஒவ்வொரு தொகுதியிலும் என்னென்ன பணிகள் நடந்திருக்கின்றன, எதனால் தாமதம்? எந்தெந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, எதுவெல்லாம் மக்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்தப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டும் என்ற ஆலோசனைகள் கொடுத்துவிட்டு வந்திருக்கிறோம். நிச்சயமாக, வருகின்ற 2026இல் மீண்டும் கழக ஆட்சி அமைந்து, இந்த அணைக்கட்டுப் பகுதிக்கு இன்னும் பல பணிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

நாம் அணைக்கட்டுக்கு மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதுக்கும் பல்வேறு பணிகளைச் செய்து கொடுப்பதால்தான், ஒன்றிய பா.ஜ.க அரசால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வயிற்றெரிச்சலில் பல்வேறு நெருக்கடிகளை, அச்சுறுத்தல்களை நம்முடைய அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள். நிதி உரிமை, மொழி உரிமை, கல்வி உரிமையை மொத்தமாகப் பறிக்கிறார்கள். சென்ற வருடம் புதிய கல்விக் கொள்கை கொண்டு வந்தார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்கள் எல்லாம் அந்தக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். மீண்டும் தமிழ்நாட்டுக்குள் சமஸ்கிருத மொழியைத் திணிப்பதற்கான முயற்சி புதிய கல்விக் கொள்கையில் இருக்கிறது. மீண்டும் குலக்கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சி, புதிய கல்விக் கொள்கையில் இருக்கிறது. மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தியை எப்படியாவது குறுக்கு வழியில் திணிப்பதற்கான முயற்சி இருக்கிறது. மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டபோது, தமிழ்நாட்டு முதல்வர் `முடியாது' என்று சொன்னார்.

**2,500 கோடி ரூபாய் நிதி!**

ஒன்றிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் சொன்னார், மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டன, தமிழ்நாடு மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசுக்குக் கொடுக்கவேண்டிய 2,500 கோடி ரூபாய் நிதியை நாங்கள் கொடுக்க மாட்டோம். நீங்கள் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று சொன்னார். நான் கேட்கிறேன் அந்த நிதி என்ன ஒன்றிய அரசின் பணமா? மாநில அரசு கொடுத்திருக்கக்கூடிய வரிப்பணம்; மக்களுடைய வரிப்பணம். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனே சொன்னார், 2,500 கோடி கிடையாது, நீ பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் நான் எந்த நேரத்திலும் உன்னுடைய புதிய கல்விக் கொள்கையை என்னுடைய தமிழ்நாட்டு மக்கள்மீது திணிக்க விட மாட்டேன், இந்தியைத் திணிக்க மாட்டேன், சமஸ்கிருதத்தைத் திணிக்கிற முயற்சியை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டேன் என்று சொன்ன தலைவர், நம்முடைய தலைவர் அவர்கள். அதற்கு சட்டப் போராட்டம் நடத்தி, இன்றைக்கு அந்த சட்டப் போராட்டத்தில் நம்முடைய முதலமைச்சர், தலைவர் அவர்கள் வென்று காட்டி இருக்கிறார். எந்த புதிய கல்விக் கொள்கையை எட்டு மாதங்களுக்கு முன்பு எதிர்த்தோமோ, அந்தப் புதிய கல்விக் கொள்கையை இன்றைக்குப் பல மாநில முதலமைச்சர்கள் எதிர்க்க ஆரம்பித்துள்ளார்கள்.

இன்றைக்கு ஒன்றிய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது என்றால், மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் பார்க்கிறார்கள், தமிழ்நாடு முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறார், தமிழ்நாடு என்ன முடிவெடுக்குது, அந்த முடிவை நாமும் எடுப்போம் என்று மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு முன்மாதிரியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

**பொய் பிரச்சாரம்!**

நிதி உரிமை, மொழி உரிமை, கல்வி உரிமையைப் பறிப்பது மட்டுமல்ல, இன்றைக்கு ஒன்றியப் பிரதமர் மோடி அவர்கள், மாநிலத்துக்கு மாநிலம் சண்டை மூட்டி விடுகிற வேலையில் ஈடுபட்டிருக்கிறார். பீகார் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் 6ஆம் தேதியும் 11ஆம் தேதியும் நடைபெற இருக்கிறது. அந்தத் தேர்தல் பிரச்சாரத்துக்கு ஒன்றியப் பிரதமர் அங்கே சென்று பேசுகிறார். அங்கே சென்று, தமிழ்நாட்டில் பீகார் மக்கள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்று கொஞ்சம்கூட கூச்சம் இல்லாமல் ஒரு பொய் பிரச்சாரத்தை அவர் செய்து வருகிறார். பீகாருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் என்ன சம்பந்தம்?

தமிழ்நாட்டு மக்கள் மேல் அவருக்குக் கோபம். ஏனென்றால், தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.கவைப் புறக்கணித்து வருவதால் இந்தக் கோபம். நேற்று நம்முடைய தலைவர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு ஒரு சவால் விட்டார்கள். உங்களுக்கு தைரியம் இருந்தால், இன்றைக்கு பீகாருக்குச் சென்று தமிழ்நாட்டைப் பற்றி கொச்சைப்படுத்திப் பேசுகிறீர்களே இன்னும் நான்கு மாதங்களில் தமிழ்நாட்டில் தேர்தல் வரப்போகிறது; அடிக்கடி வருவீர்கள். இனிமேல் உங்களுக்குத் தைரியம் இருந்தால், அங்கு பேசிய பேச்சை நீங்கள் தமிழ்நாட்டில் பேசிவிட்டு திரும்பிப் போய்விட முடியுமா? தமிழ்நாட்டு மக்கள் உங்களை விட்டுவிடுவார்களா?



பீகார் மக்களை நாம் எங்கேயாவது துன்புறுத்துகிறோமா? எனக்குத் தெரிந்து, பீகாரில் இருந்து வந்த ஒரேயொருவர்தான் அதாவது, ஆர்.என்.ரவி அவர்கள் மட்டும் தான் தமிழ்நாட்டில் கஷ்டப்படுகிறார். அவரையும் நாம் கஷ்டப்படுத்தவில்லை. தமிழ்நாட்டு மக்களை அவர் கஷ்டப்படுத்த நினைக்கிறார், அதனால் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்கள் அவரை கஷ்டப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி கஷ்டப்படுத்துகிற ஆர்.என்.ரவியைக் கூட நம்முடைய தலைவர், `திரும்பிப் போ' என்று சொல்லவில்லை. இங்கேயே இருங்கள். நீங்கள் இங்கு இருக்கிற வரைக்கும் எங்களுக்கு நல்லது. எங்களுடைய பிரச்சாரத்தை நீங்களே பாதியைப் பார்த்துக்கொள்கிறீர்கள் என்று நம்முடைய தலைவர் அவர்கள் அவரைக்கூட கஷ்டப்படுத்தவில்லை.

**வாக்காளர் பட்டியல் திருத்தம்!**

இதையெல்லாம் நாம் மக்களிடம் பேச வேண்டும். இப்போது இன்னொன்றைக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டுக்குள் எஸ்.ஐ.ஆர் என்ற ஒரு சதித் திட்டத்தைக் கொண்டு வரப் பார்க்கிறார்கள். ஸ்பெஷல் இன்டென்சிவ் ரிவிஷன், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம். ஏற்கெனவே பீகாரில் இந்த எஸ்.ஐ.ஆர் திட்டத்தைச் செயல்படுத்தி இஸ்லாமியர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், மகளிர் என்று கிட்டத்தட்ட 65 லட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி இருக்கிறார்கள்.

இப்போது, அதையே பின்பற்றி இன்றைக்கு தமிழ்நாட்டிலும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய பா.ஜ.க அரசு தேர்தல் ஆணயம் மூலமாக இதை முயற்சிக்கிறது. ஆகவே சங்கிகள், அடிமைகளின் இந்த சூழ்ச்சித் திட்டமான எஸ்.ஐ.ஆரை நாம் விழிப்புடன் எதிர்கொள்ள வேண்டும். தேர்தல் ஆணயம் இல்லை, அமித்ஷாவே தேர்தல் ஆணையராக வந்தாலும் தமிழ்நாட்டில் என்றைக்குமே காவிகளால் கால் ஊன்ற முடியாது.

இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நிலைமையை யோசித்துப் பார்த்தால் நமக்கே கொஞ்சம் பாவமாகத்தான் இருக்கிறது. முதலில் ஜெயலலிதா அம்மா இருந்தவரைக்கும் அந்த அம்மா காலில் விழுந்து கிடந்தார். அந்த அம்மா இறந்த பிறகு, அந்த அம்மாவின் நெருங்கிய தோழி சசிகலா அம்மா காலில் விழுந்தார். அந்த அம்மா சிறைக்குப் போனவுடன் இங்கு இருக்கக்கூடிய டி.டி.வி. தினகரனின் காலில் கொஞ்ச நாள் விழுந்துகிடந்தார். அதன்பிறகு உயர்வு பெற்று டெல்லிக்குச் சென்றார். டெல்லிக்குச் சென்று மோடி காலிலும், அமித்ஷா காலிலும் விழுந்து கிடந்தார். இப்போது, மறுபடியும் தமிழ்நாட்டுக்குள்ளேயே விழுறதுக்கு புதிதாக ஏதாவது கால் கிடைக்குமா என்று தேடிக்கொண்டு இருக்கிறார். தமிழ்நாட்டில் இல்லை, இந்தியாவிலேயே இப்படி ஒரு தலைவரை நீங்கள் பார்த்திருப்பீர்களா?

அதனால்தான் நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கிறேன். எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளராக எப்பொழுதுமே இருக்க வேண்டும் என்று. அவரின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்குப் போகிறார், அவர்கள் கூட்டணியிலேயே இல்லாத அவர்களைத் திட்டிக் கொண்டிருக்கக்கூடிய இன்னொரு இயக்கத்தின் கொடியை அவர்கள் கட்சிக்காரர்களே தூக்கி காட்டுகிறார்கள். இவர் அதைப் பார்த்து மிகவும் குஷியாகி, பார்த்தீர்களா பிள்ளையார் சுழி போட்டாச்சு. இப்படி ஒரு கரகாட்ட கும்பலை, எங்கேயாவது தமிழ்நாடு பார்த்திருக்கிறதா? இதையெல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

எடப்பாடி பழனிசாமி அவர்கள், மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்பினார். ஒருத்தர் பச்சை நிற பேருந்தில் கிளம்பினார். இன்னொருத்தர் சிவப்பு நிற பேருந்தில் கிளம்பினார். ஆனால், நான் சொல்கிறேன், நிச்சயமாக வெற்றி பெறப்போவது மகளிர் விடியல் பயண திட்டத்தைக் கொடுத்த, நம்முடைய தலைவர் கொடுத்த அந்த பிங்க் பஸ் தான் மக்களுடைய அன்பைப் பெற்று, கடைசியில் வெற்றி பெறப்போகிறது.

எடப்பாடி பழனிசாமி அவர்கள், பேருந்தை எடுத்துக் கொண்டு கிளம்பும்போது, முதலில் நிறைய கூட்டம் இருந்தது. அப்பவே சொன்னேன், 'இன்றைக்கு நல்லா இருக்கும் போகப் போக பாருங்கள், ஒரு ஒரு ஸ்டாப்பா நிறைய பேர் இறங்குவார்கள். நீங்கள் பிரச்சாரத்தை முடித்துவிட்டு கடைசியாக வரும் போது, நீங்களும் அந்த ஓட்டுநரும் மட்டும்தான் இருப்பீர்கள்' என்று சொன்னேன். ஓட்டுநரும் உங்களுக்காக வரவில்லை, சம்பளத்துக்காக வந்திருக்கார் என்று சொன்னேன்.

அன்றைக்கு நான் சொன்னது இன்றைக்கு நடந்துகொண்டு இருக்கிறது. ஒவ்வொரு நாளாக ஒவ்வொருத்தராக நீக்கிக் கொண்டு இருக்கிறார். முதலில் சசிகலாவை நீக்கினார், அதன் பிறகு தினகரனை நீக்கினார், பிறகு ஓ.பி.எஸ்ஸை நீக்கினார், இரண்டு நாட்களுக்கு முன்பு செங்கோட்டையனை நீக்கி இருக்கிறார். இப்படி தொடர்ந்து நீக்கி, நீக்கி ஒருநாள் அவர் தன்னையே மறந்து, 'எடப்பாடி பழனிசாமி கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்' என்று அவரே தன்னை நீக்கினாலும் நீக்கிக்கொள்வார்.

எடப்பாடி பழனிசாமி அவர்கள், அவர் கட்சியைக் `கரகாட்டகாரன்' படத்தில் வரும் அந்த கார் மாதிரி மாற்றிவிட்டார். அந்தக் கட்சி யாரிடம் இருக்கிறது என்று எடப்பாடி பழனிச்சாமிக்கும் தெரியவில்லை, அ.தி.மு.க தொண்டனுக்கும் தெரியவில்லை. நான் பலமுறை அ.தி.மு.க. தொண்டனுக்கும், தி.மு.க. தொண்டனுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தைச் சொல்லி இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உடன்பிறப்புகள் இரண்டு மாவட்டத்தில் இருக்கக்கூடிய இரண்டு பேர், ஒரே மாவட்டத்தில் வெவ்வேறு ஒன்றியங்களில் இருக்கின்ற இரண்டு பேரும் நீண்ட நாள் கழித்து சந்தித்துக்கொண்டார்கள் என்றால், என்னப்பா எப்படி இருக்க? நல்லா இருக்கியா? வீட்டில் நல்லா இருக்காங்களா? தலைவரின் பேட்டியைப் பார்த்தியா? படிச்சியா? போராட்டத்துக்குப் போறியா? ஆர்ப்பாட்டத்துக்குப் போறியா? இப்படித்தான் தி.மு.க. காரர்கள் பேசிக்கொள்வார்கள்.

ஆனால், நீண்டநாள் கழித்து அ.தி.மு.க. தொண்டர்கள் சந்தித்தார்கள் என்றால் என்ன பேசிக்கொள்வார்கள் என்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இரண்டு பேரும் பேசிக்கவே மாட்டார்கள். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். இவன் எந்த அணியாக இருப்பான், நேற்றுவரை அந்த அணியில் இருந்தான், இன்றைக்கு எந்த அணியில் இருக்கான்? என் காலை வேற பார்த்துக்கொண்டே இருக்கான், காலில் விழப் போகிறானா, இல்லை என் காலை வாரிவிடப் போகிறானா என்ற பயம் அவர்களுக்குள் இருந்துகொண்டே இருக்கும். இதுதான் இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை.

இதையெல்லாம் தாண்டி, முன்னாள் அமைச்சர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள், நேற்று முன்தினம் ஓர் உண்மையை ஒப்புக்கொண்டார். அவர் பேட்டியிலேயே சொல்லிவிட்டார். `எடப்பாடி பழனிசாமி அவர்கள், அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் ஆனது, ஒரு பிக்பாக்கெட்டுக்குச் சமம்' என்று சொல்லிவிட்டார். ஒரு திருடன் எப்படி திருடிவிட்டுப் போவானோ, அதே மாதிரி எடப்பாடி பழனிசாமி அவர்கள் இன்றைக்கு அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் ஆகிவிட்டார் என்று தன்னுடைய மைண்ட் வாய்ஸ் எல்லாம் ஓப்பனாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்.

**கழகத்தின் வரலாறு!**

எடப்பாடி பழனிசாமி சசிகலா, ஓ.பி.எஸ், டி.டி.வி.தினகரன் இவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிடீம் என்று நம்மை விமர்சனம் செய்கிறார். நான் சொல்கிறேன், கலைஞரின் உடன்பிறப்புகள் நீங்கள் இருக்கிற வரைக்கும் தி.மு.கவுக்கு பிடீமும் தேவையில்லை, சி டீமும் தேவையில்லை. எப்போதும் எதிரிகளைக் களத்தில் நேருக்கு நேராக சந்திக்கிற வரலாறுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு.

இங்கு, பூத் கமிட்டி உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். இந்த அரசியலை எல்லாம் மக்களிடம் கொண்டு சென்று பேசுங்கள். ஆட்சியின் சாதனைகளைத் தொடர்ந்து மக்களுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே இருங்கள். அரசின் திட்டங்களை நம் தலைவர் சொல்லி இருக்கிறார். நிச்சயம் இந்த நான்கரை வருடத்தில் அரசின் திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டமாவது, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து குடும்பங்களில் யாராவது ஒருத்தராவது நிச்சயம் பயனாளியாக இருப்பார்.

திண்ணைப் பிரச்சாரங்களில் ஈடுபடுங்கள். பெரிய கூட்டங்கள் எல்லாம் நடத்த வேண்டும் என்று அவசியம் இல்லை. தெரு முனைப் பிரச்சாரங்களை நடத்துங்கள். துண்டறிக்கைகளை அச்சடித்துக் கொடுங்கள். மக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருங்கள். அடுத்த ஐந்து மாதம் மிக மிக முக்கியமான காலம். இதை உணர்ந்து நாம் செயல்பட்டால், தலைவர் சொன்ன மாதிரி 200 அல்ல 200க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழக அணி, நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிச்சயம் மிகப்பெரிய வெற்றியைப் பெறும்.

தலைவரிடம் அதிகமான தொகுதிகளில் வெற்றிபெறுவோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிப்பெற்றுக் காட்ட வேண்டும். அந்த 200க்கு துவக்கமாக இந்த அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும். தலைவர் சொன்னது போல நாம் ஒவ்வொருவரும் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி." என் வாக்குச்சாவடியில் சென்ற சட்டமன்ற தேர்தலில் வாங்கிய வாக்கைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தை நாம் வாங்கிக் காட்ட வேண்டும். அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

நம்முடைய கழகம், ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம்முடைய தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் உட்கார வேண்டுமென்றால், நாம் அடுத்த ஐந்து மாதங்கள் உறங்கக் கூடாது. நமக்கு இருக்கக்கூடியதெல்லாம் ஒரே நோக்கம், நம்முடைய அணியினுடைய வெற்றி. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றி. உதய சூரியனின் வெற்றி.

தலைவர் யாரை வேட்பாளர் என அறிவிக்கிறாரோ அவரின் வெற்றி மட்டுமே நம்முடைய கண்களுக்குத் தெரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும், வந்திருக்கக்கூடிய கலைஞரின் உடன்பிறப்புகள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், அமுலு விஜயன், மாநகராட்சியின் மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாபு, மாவட்ட அவைத் தலைவர் முகமது சகி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் அரசு, பிரதாப், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், சீனிவாசன், மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், மாநகர துணைச் செயலாளர் முன்னா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.ஜி.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிமாறன், புவியரசி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஞானசேகரன், வெங்கடேசன், குமாரபாண்டியன், கஜேந்திரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆர்.கே.ஐயப்பன், தங்கதுரை, பேரூர் கழகச் செயலாளர்கள் ஜாகிர் உசேன், பெருமாள் ராஜன், அருள்நாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜாமார்த்தாண்டன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ரவிக்குமார், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் வெங்கடேசன், ஒன்றிய குழுத் தலைவர்கள் அமுதா ஞானசேகரன், பாஸ்கர், பேரூராட்சித் தலைவர்கள் சுகப்பிரியா குமரன், சத்தியவதி பாஸ்கர், பவானி சசிகுமார், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தேவராஜ், முருகானந்தம், வெங்கடேசன், விநாயகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரகாஷ், வி.எம்.டி.பாலாஜி, அர்ச்சனா நவீன்சங்கர், டீட்டா சரவணன், சத்தியமூர்த்தி, ராஜ்கமல், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முரளி பாஸ்கர், தினேஷ்குமார், இப்ராஹிம், பன்னீர் செல்வம், சுரேஷ்குமார், சதீஷ்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமார், கார்த்தி, கண்ணன், ஜெயபிரகாஷ், லிங்கேஸ்வரன், பகுதிக் அமைப்பாளர்கள் திவாகர் என்கிற ராகுல், ராஜேஷ், பேரூர் அமைப்பாளர்கள் லோகேஷ், வெங்கடேசன், சத்யராஜ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில்கள்!

`நிகழ்ச்சியின் நிறைவுப் பகுதியாக கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில்களின் விவரம் வருமாறு:

**கேள்வி - பதில்கள்**

**நித்தியானந்தம், வேலூர் ஒன்றியம்!**

**கேள்வி:** இளைஞர்களுக்கு 2026ஆம் ஆண்டுத் தேர்தலில் அதிக வாய்ப்பு வழங்கப்படுமா?

**துணை முதலமைச்சர்:** தலைவருடைய எதிர்பார்ப்பும், எனது எண்ணமும் இதுதான். நிச்சயம் உங்களின் கோரிக்கையைத் தலைவரிடத்தில் எடுத்துச் சொல்லி, 2026 தேர்தலில் இளைஞர்களுக்கு அதிகமான வாய்ப்புகளைப் பெற்றுத் தர நான் முயற்சிக்கிறேன்.இங்கு வந்திருக்கின்ற மூத்த கழக நிர்வாகிகள், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, புதிதாக வரக்கூடிய இளைஞர்களை, நீங்கள் தான் வழிநடத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**கணபதி, அணைக்கட்டு தொகுதி!**

**கேள்வி:** இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள், அரசு மற்றும் கழக நிகழ்ச்சிக்காக வரும்போது, மாவட்ட எல்லையிலோ அல்லது மாவட்டத் தலைவர்களுடனோ திறந்தவெளி வாகனத்தில் பயணம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். அப்போதுதான் உங்களைப் பார்த்து கையசைத்து வரவேற்கவோ மலர்களைத் தூவி வரவேற்கவோ எங்களால் முடியும். செய்வீர்களா?

**துணை முதலமைச்சர்:** நான் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், உங்களுடைய வரவேற்பை ஏற்கும் விதமாக திறந்தவெளி வாகனத்தில்தான் வந்துகொண்டு இருந்தேன். சில நாட்களுக்கு முன்பு ஒரு துயரமான சம்பவம் நடந்தது. கூட்டம் கூட்டாதீர்கள்; எப்பொழுதுமே எங்கு போனாலும் வண்டியை நிறுத்தி, அனைவரோடும் கைகுலுக்கிப் பேசிவிட்டுத்தான் செல்வேன். பொது மக்களுக்கு எந்தவித ஒரு இடையூறும் இல்லாமல் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தாமல், அந்த வரவேற்பு நிகழ்ச்சியெல்லாம் நாம் செயல்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**கந்தன், வேலூர் ஒன்றியம்!**

**கேள்வி:** திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எப்படி கொண்டுசெல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?.

**துணை முதலமைச்சர்:** நம்முடைய அரசு இந்த நான்கரை ஆண்டுகளில் பெண்கள், இளைஞர்கள், முதியோர்கள், குழந்தைகள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள் இப்படி அத்தனை பேருக்கும் நம்முடைய தலைவர் அவர்கள் பார்த்துப்பார்த்து பல்வேறு திட்டங்களைக் கொடுத்திருக்கிறார். இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் தொடர்ந்து பேசிப் பேசி அவர்களிடம் ஞாபகப் படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். அந்தப் பணியை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.கழகப் போர்வாளாகிய நீங்கள்தான் மக்களிடம் சென்று, அரசின் சாதனைகளை, அதனுடைய பயன்களை விளக்கிக் கூற வேண்டும்.

**சங்கர், அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம்!**

**கேள்வி:** படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது?.

**துணை முதலமைச்சர்:** இந்த நான்கரை ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில், 941 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 31 லட்சம் பேர்களுக்கு புதிதாக வேலை வாய்ப்புகளை நாம் வழங்கி இருக்கின்றோம். அதுமட்டுமல்ல, 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக 16 லட்சம் மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கி, மூன்று லட்சம் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கி இருக்கிறோம். முதலீடுகளை ஈர்ப்பதும் சரி, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும் சரி, இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத சாதனைகளை நம்முடைய தமிழ்நாடு அரசு செய்துகொண்டு இருக்கிறது.

நேற்று, பீகார் மாநிலத்தில் முதலமைச்சர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவ். லல்லு பிரசாத் யாதவ் அவர்களின் மகன். பீகார் சட்டமன்றத் தேர்தலில் அவர்தான் முதலமைச்சர் வேட்பாளர். ஒரு பத்திரிகைக்கு பேட்டி கொடுக்கிறார். பேட்டி கொடுத்த உடனே பேட்டியாளர் கேட்கிறார், உங்களுக்கு இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் யார் என்று கேட்கும்போது, தேஜஸ்வி யாதவ் ஒரு வினாடி கூட யோசிக்காமல், நம்முடைய தலைவர் பெயரைச் சொல்கிறார். அவர்தான் இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் என்று. அதற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்கள். என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்து கொண்டு இருக்கிறார். யாருமே எதிர்பார்க்காத 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டம், கிட்டத்தட்ட ஒண்ணே கால் கோடி பேருக்கு மாதம் 1,000 ரூபாய் கொடுக்கிறார். 'தமிழ்ப் புதல்வன்' திட்டம், `புதுமைப் பெண்' திட்டம். 'தாயுமானவர்' திட்டம் 70 வயதுக்கு மேல் இருக்கக்கூடிய முதியோர்கள் இனிமேல் ரேஷன் கடைக்குப் போகத் தேவையில்லை. அவர்களின் வீடுகளுக்கே மாதந்தோறும் அந்த ரேஷன் பொருட்கள் வந்து சேரும் என்ற திட்டம். நேற்று முன்தினம் ஒரு ஜி.ஓ போட்டிருக்கிறார், தலைவர் அவர்கள். 70 வயதைக் குறைத்து இப்போது 65 வயதாக மாற்றிவிட்டார்.

இப்படி ஒவ்வொரு பிரிவாக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்குப் பொறுப்பு. இது இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கிடையாது. இப்படி அத்தனை பேருக்கும் பார்த்துப்பார்த்து திட்டங்களைச் செய்து கொண்டு இருக்கிற நம்முடைய முதலமைச்சர்தான், இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் என்று எல்லா மாநிலத் தலைவர்களும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**அசோகன், அணைக்கட்டு.**

**கேள்வி:** பாசிச பா.ஜ.க. அரசு போடும் முட்டுக்கட்டைகளைத் தாண்டி, நாம் வெற்றி பெறுவது எப்படி?.

**துணை முதலமைச்சர்:** நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமைந்ததிலிருந்து அந்தப் பணிகளை நாம் தொடர்ந்து செய்துகொண்டு இருக்கிறோம். எனவே, அடுத்த நான்கு மாதம் மிக மிக முக்கியம் என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த 234 தொகுதியிலும் நமக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது. அண்ணன் நந்தகுமார் அவர்கள் சொன்னார்கள், இது 11வது தொகுதி. தலைவர் சென்னையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளையும் வரவைத்து, `உடன்பிறப்பே வா' என்ற நிகழ்ச்சி மூலமாகக் கலந்துரையாடிக்கொண்டு இருக்கிறார்கள். நான் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியாக பயணம் செய்து, அங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகளுடன் இதேமாதிரி ஒரு சந்திப்பு நடத்திக்கொண்டு இருக்கிறேன். இது 11வது தொகுதி கிடையாது. இது 13வது தொகுதி.

நான் நிச்சயமாகச் சொல்கிறேன். நான் சென்று வந்திருக்கக்கூடிய அந்த 13 தொகுதியும் நிச்சயம் நம்முடைய கூட்டணி நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அணி வெல்லப்போவது உறுதி. இன்றைக்கு இங்கு பேசிவிட்டு நாளைக்கு அடுத்த தொகுதிக்குச் சென்றுவிடுவேன். ஆனால், அடுத்த நான்கு, ஐந்து மாதங்கள் மக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கப்போவது நீங்கள்தான்.

உங்களால் அவர்களின் கோரிக்கையைச் செய்து கொடுக்க முடிந்தால் செய்துகொடுங்கள். செய்து கொடுக்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை அவர்களின் கோரிக்கைகளைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். அந்தக் கோரிக்கைகளை உங்களால் செய்து கொடுக்க முடிந்தால் செய்துகொடுங்கள், இல்லையென்றால், உங்களின் ஒன்றியச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்.

உங்களின் கோரிக்கைகளை என் பெயரைப்போட்டு என்னுடைய அலுவலகத்துக்கு அனுப்பிவையுங்கள். உங்களின் கோரிக்கைகளைக் கேட்பதற்காக, அதைச் சரிசெய்வதற்காக, நம்முடைய இளைஞர் அணியின் தலைமை அலுவலகம் அன்பகத்தின் கதவு என்றைக்கும் திறந்திருக்கும். நிச்சயம் என்னால் முடிந்த அளவுக்கு அந்தப் பணிகளில் ஈடுபடுவேன். உங்களின் கோரிக்கைகளைச் சரிசெய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவேன். உங்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருந்தால், அதைத் தலைவரிடம் சொல்லி, அதைச் செய்வதற்கான முழு முயற்சியிலும் நான் ஈடுபடுவேன். எனவே, நான் உங்களுக்கு கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதி, நான் என்றைக்கும் உங்களில் ஒருவனாக, உங்களோடு பயணிக்கத் தயாராக இருப்பேன். நீங்கள் எனக்குக் கொடுக்கக்கூடிய வாக்குறுதி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இந்த அணைக்கட்டுத் தொகுதியில் மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடித் தர வேண்டும் என்று வாக்குறுதி எனக்கு கொடுக்க வேண்டும்.

...இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார்.